28.01.15

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### அரியலூரில் நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வியாழக்கிழமை(ஜன.29) நடைபெறுகிறது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஜன.29 ஆம் தேதி (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு ஆட்சியர் அலுவலக பிரதான கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம் என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கெலவரப்பள்ளி அணை: இன்று முதல் தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலவரப்பள்ளி அணையில் இருந்து புதன்கிழமை (ஜன. 28) முதல் தண்ணீர் திறந்து விட முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட உத்தரவு: கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்தில் இருந்து இரண்டாம் போகப் பாசனத்துக்குத் தண்ணீர் திறந்துவிடக் கோரி விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அவர்களது கோரிக்கையை ஏற்று, நீர்த்தேக்கத்தில் இருந்து புதன்கிழமை (ஜன. 28) முதல் தண்ணீர் திறந்து விடப்படும். இதனால், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டத்தில் உள்ள 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் என உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனவரி 30-இல் மண் புழு உர தயாரிப்பு பயிற்சி முகாம்

ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் ஜனவரி 30-ஆம் தேதி மண் புழு உரம் தயாரிப்பு பயிற்சி நடைபெறவுள்ளது. இயற்கை உரங்களை இடுவதால் மண்ணின் பண்புகள் மேம்பட்டு பயிர் விளைச்சல் அதிகரிக்கின்றது. ஆனால் எளிதல் கிடைக்காததாலும், அதிக விலையாலும் உழவர்கள் இயற்கை உரங்களை பயன்படுத்தத் தயங்குகின்றனர். பொள்ளாச்சி பகுதிகளில் தென்னை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. தென்னை மட்டைகள் மற்றும் ஓலைகளில் வியத்தகு அளவு ஊட்டச்சத்துக்கள் உள்ளன. அவற்றை முறையாக மறுசுழற்சி செய்தால் ரசாயன உரங்களின் தேவையை வெகுவாகக் குறைக்கலாம். இதைக் கருத்தில் கொண்டு டிராக்டர் கொண்டு இயக்கப்படும் தென்னை மட்டை வெட்டும் இயந்திரத்தின் செயல் விளக்கத்துடன் கூடிய மண் புழு உரம் தயாரித்தல் குறித்த ஒரு நாள் பயிற்சி அழியார் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் ஜன.30-ம் தேதி நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில் பங்கேற்க விரும்புபவர்கள் ஆழியார் நகரில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையம் அல்லது 04253-288722, 9443059228 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோழி, முயல் வளர்ப்பில் சாதிக்கும் காய்கறி வியாபாரி



விருதுநகரிலிருந்து மல்லாங்கிணர் செல்லும் ரோட்டில் வரலொட்டி அருகே தண்டபாணி என்பவருக்கு சொந்தமான "சுமதி பழத்தோட்டம்' உள்ளது. இங்கு கொய்யா, சப்போட்டா என்ற பலவித பழ பயிர்களை விளைவித்து வருகிறார்.

விருதுநகர் மார்க்கெட்டில் காய்கறி கடை நடத்தும் இவர், கோழி, ஆடு வளர்ப்பதில் ஆர்வமாக உள்ளார். அதாவது தனது தோட்டத்தில் நாட்டு கோழி, கிரிஜா கோழி என 500 கோழிகளை வளர்க்கிறார். இதன் மூலம் தினம் 200 முட்டைகள் கிடைக்கிறது. ஒரு முட்டை ரூ. 10, கிலோ கோழி ரூ. 300க்கு விற்பனை செய்கிறார். முட்டை, கோழி விற்பனை மூலம் ஆண்டுக்கு மூன்று லட்சம் பெறுகிறார். இவரே பழத்தோட்ட பண்ணை வைத்திருப்பதால் இதற்கான தீவன செலவு குறைவே. இதே போல் ராஜஸ்தானில் உள்ள மத்திய அரசு பண்ணையில் வாங்கி வரப்பட்ட ஒயிட் ஜெயின்ட் முயல்களும் வளர்க்கிறார். 45 நாட்களுக்கு ஒருமுறை குட்டி போடும் பெண் முயல், ஒரு முறைக்கு 10 குட்டி போடுகிறது. இது ஐந்து மாதத்திலே ஆறு கிலோ வரை எடைக்கு வந்துவிடுகிறது. ஒவ்வொரு முயலுக்கும் தனித்தனி கூண்டு அமைத்துள்ளார். இந்த முயலை ஆய்வுக்காக பள்ளி, கல்லூரிக்கு தருகிறார். நாட்டு புறாக்களும் இங்கு உண்டு. அடை காக்கும் புறா 21 நாளில் குஞ்சு பொறித்து விடும். அடுத்த 21 நாளில் பறக்க தொடங்கும் குஞ்சு புறா, 75 வது நாளில் முட்டையிட தொடங்கி விடும். குஞ்சு பொறித்த தாய் புறா, அடுத்த ஒரு வாரத்திலே மீண்டும் முட்டையிடும். ஒரு ஜோடி புறா ரூ. 250, குஞ்சு ரூ. 150 க்கு விற்கிறேன் என்கிறார் தண்டபாணி. தொடர்புக்கு 93674 11815.

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>



**கால்நடைகளின் இனப்பெருக்கத்திற்கு**: தாது உப்புக்களின் பங்கு முக்கியம். கால்நடைகளின் உடலமைப்பு 3 முதல் 5 சதவிகிதம் தாது உப்புக்களினால் ஆனது. கால்நடை தீவனத்தில் தாது உப்புக்கள் மிகக்குறைந்த அளவே தேவைப்பட்டாலும் அவற்றின் குறைபாடுகள் இனப்பெருக்க செயல்களைப் பாதிக்கிறது. பாஸ்பரஸ், கால்சியம், மாங்கனீசு, அயோடின் செலீனியம் தாது உப்பு வைட்டமின் சத்துடன் சேர்ந்து இனப்பெருக்கத்தில் பெரும் பங்கு

வகிக்கின்றன. கருத்தங்காமை, பிறந்த குட்டிகளில் இறப்பு, குறைபாடு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. செலீனியம் தாது உப்பு கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்ட கறவை மாடுகளில் கருச்சிதைவு, நஞ்சுக்கொடி தங்குதல், சூலகக்கட்டிகள் கருப்பை அழற்சி போன்ற நோய்களின் நிகழ்வுகள் குறைவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு தீவனம் மூலம் ஊட்டச்சத்துக்கள் முழுமையாக கிடைக்க குடற்புழு நீக்கம் உரிய இடைவெளியில் செய்வது மிகவும் அவசியம். போதிய அளவு சுத்தமான குடிநீர், எந்நேரமும் கால்நடைகளுக்கு கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தேவையான அளவு பசுந்தீவனம், உலர் தீவனம் மற்றும் தாது உப்பு கலவை அடங்கிய அடர்தீவனம் அளிக்க வேண்டும். தகவல் : முனைவர். ரா.ராஜ்குமார், கால்நடைப்பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், திருவண்ணாமலை-600601.

**கன்றுகள் பிறந்தவுடன் கவனிக்க வேண்டியவை**: கன்று போட்டவுடன் தாய்ப்பசு கன்றுகளை நக்கிச் சுத்தம் செய்து விடும். அப்படிச் செய்யவில்லை என்றால் சுத்தமான துணியைக் கொண்டு உடலை சுத்தம் செய்து கன்றை உலர வைக்க வேண்டும். வைக்கோலை கட்டிக் கொண்டு கன்றுகளை சுத்தம் செய்து உலர வைக்கலாம். மூச்சுத்திணறும் போது கன்றின் மூக்கில் உள்ள சளியை எடுத்து விட்டு மார்பகத்தைச் சுற்றி அழுத்தி விட்டால் மூச்சுத்திருப்பி கன்று நன்றாக சுவாசிக்க ஆரம்பித்து விடும். பிறந்த கன்றில் தொப்புள் கொடியை சுமார் 2 முதல் 3 செ.மீ. நீளத்திற்கு விட்டு ஒரு சுத்தமான நூலினை இறுக்கமாக கட்டி விட வேண்டும். அதன் கீழ் 1 செ.மீ. விட்டு சுத்தமான கத்திரிக்கோலை கொண்டு கத்திரித்து விட வேண்டும். கத்திரித்த இடத்தில் உடனே "டிஞ்சர்' அயோடின் தடவி விட வேண்டும். **சீம்பால்:** பிறந்த கன்றுகளுக்கு அரைமணி நேரத்திற்குள் சீம்பால் கிடைக்கச் செய்ய வேண்டும். சீம்பாலில் நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது. கன்றுகளுக்கு வராமல் தடுக்கும். சீம்பாலில் மாவு மற்றும் கொழுப்புச் சத்துக்களுடன் கன்று வளர்ச்சிக்குத் தேவையான புரதம், உயிர்ச்சத்து, தாதுஉப்புகள் "இம்முனோ கிளாபுலின்' எனப்படும் நோய் எதிர்ப்பு

சக்தி போன்றவை உள்ளன. பொதுவாக கன்றுக்குட்டிக்கு முதல் ஒரு வாரத்திற்கு தினசரி ஒன்றரை லிட்டர் வரை சீம்பால் கொடுக்கப்பட வேண்டும். கன்று பிறந்தவுடன் 10 முதல் 15 நிமிடத்திற்குள் முதல் கட்ட சீம்பாலும், 1 முதல் 2 மணி நேரம் கழித்து இரண்டாவது கட்ட சீம்பாலும் கொடுக்க வேண்டும். சீம்பால் கிடைக்காத நிலையில் நோய் உண்டாகலாம். அப்போது இதர பசுக்களின் சீம்பால் அளிக்கலாம். அப்படியும் கிடைக்கவில்லை என்றால் கீழ்க்கண்ட பொருட்கள் குறிப்பிட்ட விகிதத்தில் ஒரு நாளைக்கு 3 தடவை கொடுக்கலாம். முட்டை 1 (55 - 60 கிராம்), தண்ணீர் 300லி, விளக்கெண்ணெய் 12 தேக்கரண்டி, பால்500மிலி. **தகவல்:** வெ.மீனலோசனி, இரா.அன்னல்வில்லி, இரா.ஜோதிப்ரியா, கால்நடைப்பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கிருஷ்ணகிரி635 001. **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>தீவிரமுறை கால்நடை வளர்ப்பில் வேலிமசால்</u>



தென் அமெரிக்காவை தாயகமாகக் கொண்ட இப்பயிர் நெட்டுக்குத்தாகவும், அடர்த்தியாகவும் வளரும் ஒரு பல்லாண்டு பயிராகும். இப்பயிர் வெட்ட வெட்ட மறுபடியும் தளிர்த்துச் சுவையான பசுந்தீவனத்தைக் கொடுக்கும். இப்பயிர் குதிரைமசாலைப் போல் குளிர்பிரதேச பயிராக இல்லாமல் எல்லாப் பிரதேசங்களிலும் பயிரிட ஏற்றது. இறவையில் நன்கு வளரும். இப்பயிர், மானாவாரிக்கு ஓரளவு தான் உகந்தது. சுமார் 2 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய இப்பயிர் விதைத்த 6065 நாட்களில் அறுவடைக்குத் தயாராகி விடும். இப்பயிரின் இளம் இலைகள் வெளிர்பச்சை நிறம் கொண்டதாகவும், முதிர்ந்த இலைகள் கரும் பச்சை நிறம் கொண்டதாகவும் இருக்கும். மாடுகள், ஆடுகள், கோழி மற்றும் வான்கோழிகள் போன்றவற்றிற்கு இவற்றைத் தீவனமாகக்கொடுக்கலாம்.

**சாகுபடிக்குறிப்புகள்:**

வகை: பல்லாண்டு பயறுவகைத் தீவனம் பருவம்: இறவையில் ஆண்டு முழுவதும் பயிரிடலாம் மண்: எல்லா மண்வகைகளுக்கும் ஏற்றது முன்செய் நேர்த்தி: 23 உழவுகள் செய்து பண்படுத்தப்பட்ட நிலத்தில் 50 செ.மீ இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். நடவுமுறை: பார்களின் அடிப்புறத்தில் கோடு கிழித்து தொடர்ச்சியாக விதைக்கவும் அல்லது சதுர வடிவப் பாத்திகள் அமைத்து 50 செ.மீ இடைவெளியில் கோடு கிழித்து தொடர்ச்சியாக விதைக்கலாம். விதையளவு(ஏக்கருக்கு): 5 கிலோ அடியுரம் (ஏக்கருக்கு): தொழுஉரம் - 10 டன், யூரியா 40 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 80கிலோ, பொட்டாஷ் 20கிலோ மேலுரம்: ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னும் ஏக்கருக்கு 30 கிலோ யூரியா களை நிர்வாகம்: விதைத்த 25 நாட்கள் கழித்து களை எடுக்க வேண்டும். பின்னர் தேவைப்படும் போது நீர்ப்பாசனம்: விதைத்தவுடனும், விதைத்த 3 நாட்களுக்குப் பிறகும், மண் மற்றும் மழை அளவைப் பொறுத்து 810 நாட்களுக்கு ஒருமுறை பயிர் பாதுகாப்பு: பொதுவாக தேவையில்லை அறுவடை: முதல் அறுவடை 60 நாட்களில் பின்பு 40-45 நாட்களுக்கு ஒருமுறை பசுந்தீவன மகசூல்: 50 டன் (67 அறுவடைகளில்) (ஏக்கருக்கு) விதை நேர்த்தி: விதைகளின் முளைப்புத்திறனை விரைவுபடுத்த கொதித்த நீரை 34 நிமிடங்கள் ஆறவிட்டு அதில் வேலிமசால் விதைகளைப் போட வேண்டும். பின்பு 34 நிமிடங்கள் கழித்து நீரை வடித்து விட்டு விதைகளை நிழலில் உலர வைத்து விதைத்தால் நல்ல முளைப்புத்திறன் 3 அல்லது 4 நாட்களில் கிடைக்கும். விதைநேர்த்தி செய்யாமல் விதைக்கும் போது முளைப்பு பெறுவதற்கு 78 நாட்கள். விதை உற்பத்தி: வேலிமசால் விதைகளுக்குத் தற்போது சந்தையில் நல்ல தேவையிருப்பின், விதை உற்பத்திக்காகவும், இதனைப் பயிரிடலாம். மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் வேலிமசாலில் அதிக விதை பிடிக்கும். அப்போது 100 - 120 நாட்கள் வரை வளர விட்டு விதைகளைச் சேகரிக்கலாம். ஒரு ஏக்கர் பரப்பில் 100 கிலோ வரை

விதைகள் சேகரிக்க இயலும். விதைகளை ஒரு வருடம் வரை முளைப்புத் திறன் பாதிக்காமல் சேமித்து வைத்துத் தற்போதைய சந்தை விலைப்படி ரூபாய் 450 500 கி.கி என்று விற்பனை செய்யலாம். நாள் ஒன்றுக்கு கொடுக்கப்பட வேண்டிய தீவனத்தின் அளவு: கறவைமாடுகள் 10 கிலோ, கன்றுகள் 5 கிலோ, செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் 2 கிலோ, ஆட்டுக்குட்டிகள் 0.5 - 1 கிலோ, முயல் 500 கிராம் வான்கோழிகள், வாத்துக்கள் போன்றவைகளுக்கு இத்தீவனத்தைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொடுப்பதன் மூலம் 20 சதவிகிதம் தீவனச்செலவைக் குறைக்கலாம். ஆகையால் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் இறவையில் வேலிமசால் பயிரிட்டு, கால்நடைகளுக்கு அளித்தல் தீவனச் செலவைக் குறைத்து அதிக லாபம் பெறலாம்.**மூ.சுதா, ம.பழனிசாமி மற்றும்க.கௌதம் வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி.**

**மண் வள பாதுகாப்பு நிறுவனங்களை தரம் உயர்த்த மத்திய அரசு நடவடிக்கை**

ஊட்டி : மத்திய அரசின், மண் வள பாதுகாப்பு நிறுவனங்களை தரம் உயர்த்தும் நோக்கில், மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மத்திய அரசின், மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம், உத்தரகான்ட் மாநிலம், டேராடூனை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. ஊட்டி உட்பட எட்டு இடங்களில், இந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன.இந்த மையங்களில், மண் மற்றும் நீர் பரிசோதனை, மண் வளம் பாதுகாத்தல், மண் வளத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், மண் சரிவு, நிலச்சரிவு போன்ற பேரிடர்களை கட்டுப்படுத்துதல் மற்றும் தவிர்த்தல் என, பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.இந்நிலையில், இந்நிறுவனங்களின் செயல்பாடுகளுக்கு ஒரு முழுமையான அங்கீகாரத்தை வழங்கி, அவற்றின் தரத்தை உயர்த்தும் நோக்கில், 'மத்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம்' என்ற பெயரை, 'இந்திய மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு, ஆராய்ச்சி நிறுவனம்' என, மத்திய அரசு மாற்றியுள்ளது. நிறுவனத்தின் ஊட்டி ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் கோலா கூறுகையில்,

“தற்போதைய மத்திய அரசின் செயல்பாட்டால் வந்த, இந்த பெயர் மாற்றம் மூலம், மையத்துக்கு ஒரு புதிய அங்கீகாரம் கிடைத்துள்ளது; இது, நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் தரத்தை மேலும் உயர்த்தும்,” என்றார்.

## <u>'நீர்பிடிப்பு மேலாண்மையில் கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்'</u>

ஊட்டி : "மலை மாவட்ட வனப்பகுதிகளில், நீர் பிடிப்பு மேலாண்மையில் கவனம் செலுத்த வேண்டியது, காலத்தின் கட்டாயம்," என, மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் சீனிவாச ரெட்டி கூறினார். இந்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு நிறுவனத்தின், ஊட்டி ஆராய்ச்சி மையத்தில், பயிற்சி வன சரகர்களுக்கான, பயிற்சி முகாம் நேற்று துவங்கியது. கோவையில் உள்ள மாநில வன பணியாளர்களுக்கான மத்திய உயர் பயிற்சியகத்தின் நிதியுதவியுடன், 'வனப்பகுதிகளில் நீர்பிரி முகடுப்பகுதி மேலாண்மை' என்ற தலைப்பில் இப்பயிற்சி முகாம் நடக்கிறது.இதில், தமிழகம், இமாச்சல பிரதேசம், ஜம்மு, காஷ்மீர் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களைச் சேர்ந்த, 32 பயிற்சி வன ரேஞ்சர்கள் பங்கெடுத்துள்ளனர். இந்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு நிறுவனத்தின், ஊட்டி ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் கோலா, தலைமை வகித்தார். மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் சீனிவாச ரெட்டி பேசுகையில், “பல இடங்களில் நீர் பற்றாக்குறை காணப்படுகிறது. வனத்துறையில், நீர் பிரி முகடுகளை மையமாக வைத்து திட்டங்களை வகுக்க வேண்டியது, காலத்தின் கட்டாயமாகி விட்டது.இமாச்சல பிரதேசம், ஜம்மு, காஷ்மீர், மத்திய பிரதேசம் உட்பட மலைப்பகுதிகள் நிறைந்த மாவட்டங்களில், நீர் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த வேண்டியது, வன அலுவலர்களின் முக்கிய பணியாக இருக்க வேண்டும்,” என்றார்.களப்பயிற்சி, மழைநீர் சேகரிப்பு, நீர் பிரி முகடுகளை சேகரித்து, கட்டமைப்பு செய்வது உட்பட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

## துவங்கியது தர்பூசணி சீசன்

திண்டுக்கல் : கோடை காலங்களில் அதிகமாக விற்பனையாகும் தர்பூசணி பழங்களின் விற்பனை, திண்டுக்கல்லில் இப்போதே துவங்கிவிட்டது. உள்ளூர் தர்பூசணிகளான ராம்தாரி ரகங்கள், திண்டுக்கல் மாவட்டம் பழநி தொம்பம்பட்டி, மதுரை உசிலம்பட்டி, சிவகங்கை, புதுக்கோட்டை பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. உயர்தர தர்பூசணி திண்டிவனத்திலிருந்து விற்பனைக்கு வருகிறது. வியாபாரி ராணி கூறியதாவது: 20 ஆண்டுகளாக தர்பூசணி பழங்களை விற்பனை செய்கிறேன். தற்போது புதுக்கோட்டை பழங்கள் அதிகம் வருகிறது.பொதுவாக பனி இருப்பதால் வரத்து குறைந்துள்ளது. இன்னும் சிறிது நாட்கள் கழிந்தால் திண்டிவனத்திலிருந்தும், சிவகங்கையிலிருந்தும் வரத்து கூடிவிடும். நான்கு நாட்களுக்கு ஒருமுறை 9 டன் முதல் 12 வரை விற்பனையாகிறது. வியபாரிகளுக்கு கிலோ ரூ.12, பொதுமக்களுக்கு ரூ.15க்கு விற்பனை செய்கிறேன். பத்து நாட்கள் கழித்து கிலோவுக்கு ரூ.6, ரூ.8 என விலை குறைந்துவிடும். தற்போது சீசன் துவங்கியுள்ளதால் மக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர்." என்றார்.

## திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் தானியங்கி வானிலை மையம்

கம்பம் : ராயப்பன்பட்டி அருகே உள்ள திராட்சை ஆராய்ச்சிநிலையத்தில் தானியங்கி வானிலை ஆய்வு மையம் அமைக்க கோவை விவசாய பல்கலை வானிலை ஆராய்ச்சி நிலைய நிபுணர்கள் இடம் தேர்வு செய்தனர். ராயப்பன்பட்டி அருகே அமைக்கப்பட்டு வரும் திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் 50 சென்ட் பரப்பில் தானியங்கி வானிலை மையம் அமைக்கப்படுகிறது. கோவை விவசாய பல்கலை வானிலை ஆராய்ச்சி மைய பிரிவின் தலைவர் பேராசிரியர் பன்னீர்செல்வம், மற்றும் வானிலை ஆராய்ச்சி மைய நிபுணர் பாலசுப்ரமணியன் ஆகியோர் திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில்

ஆய்வு மேற்கொண்டு இடம் தேர்வு செய்தனர்.திராட்சை ஆராய்ச்சி நிலைய தலைவர் பார்த்திபன் கூறியதாவது: திராட்சை ஆராய்ச்சிநிலையத்தில் தானியங்கி வானிலை ஆராய்ச்சி மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த தானியங்கி மையம் 50 சென்ட் பரப்பில் ரூ. 12 லட்சம் செலவில் அமைக்கப்படுகிறது. இதற்கென டெண்டர்கள் கோரப்பட்டுவிட்டது. விரைவில் அமைக்கப்படும். விவசாயிகளின் மொபைல் போன்களுக்கு இனி முன்கூட்டியே சீதோஷ்ண நிலை மாற்றம் பற்றி தகவல் தெரிவிக்கப்படும். அத்தோடு சாகுபடி தொழில்நுட்பங்களும் மொபைல் போன் மூலம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம், என்றார்.

## <u>அரூர் வேளாண் சங்கத்தில் ரூ.70 லட்சம் பருத்தி ஏலம்</u>

அரூர்: அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 70 லட்ச ரூபாய்க்கு பருத்தி விற்பனை நடந்தது. அரூரில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி ஏலம் நடந்தது. அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி, நரிப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், 5000 மூட்டை பருத்திகளை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். இதில், வரலட்சுமி, ஒரு குவிண்டால்,3,800 முதல் 4,400 ரூபாய் வரை ஏலம் எடுக்கப்பட்டது. ஆர்.சி.ஹெச். ஒரு குவிண்டால், 3,400 முதல் 3,900 ரூபாய் வரை ஏலம் எடுக்கப்பட்டது. பருத்திகளை ஏலம் எடுக்க மகுடஞ்சாவடி, சேலம், ஊத்தங்கரை, அனுமந்தீர்த்தம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்தனர். நேற்று நடந்த ஏலமத்தில், 70 லட்ச ரூபாய்க்கு பருத்தி ஏலம் விடப்பட்டது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விதை சுத்தி நிலையங்களின் உரிமங்களை புதுப்பிக்க வேண்டும்

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து விதை சுத்தி நிலையங்களின் உரிமங்களை புதுப்பிக்க வேண்டும் என்று வேளாண்மை அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். தி.மலை விதைச்சான்று உதவி இயக்குனர் விஸ்வநாதன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: தி.மலை மாவட்டத்தில் உள்ள அனைத்து விதை சுத்தி நிலைய உரிமையாளர் களும் தங்களது விதை சுத்தி நிலையங்களின் உரிமங்களை மூன்று ஆண்டு களுக்கு ஒருமுறை தவறாமல் உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு உரிமங்களை புதுப்பித்துக்கொள்ள விரும்புபவர்கள் திருவண்ணா மலையில் உள்ள விதைச்சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தினை அணுகி, அதற்குரிய விண்ணப் பத்தை பெற்று, உரிய ஆவணங்களை இணைத்து அப்பகுதி விதைச்சான்று அலுவலர்களின் பரிந்துரையுடன் ரூ.1000 செலுத்தி, புதுப்பித்துக்கொள்ள வேண்டும். உரிய காலத்துக்குள் புதுப்பிக்கவில்லை யென்றால், உரிமம் காலவாதியான ஒரு மாதத்துக்குள் புதுப்பிக்க கால தாமத கட்டணமாக ரூ.250 சேர்த்து செலுத்த வேண்டும். 30 நாட்களுக்கு மேல் புதுப்பிக்கவில்லையென்றால், புதிய உரிமம் பெற விண்ணப்பிக்க வேண்டும். மேலும் புதிய விதை சுத்தி நிலையத்திற்கான உரிமம் பெற விரும்புவோர் அதற்குரிய விண்ணப்ப படிவத்தில் உரிய ஆவணங்களை இணைத்து அப்பகுதி விதைச்சான்று அலுவலர் பரிந்துரையுடன் ரூ.2 ஆயிரம் செலுத்தி, பெற்றுக்கொள்ளலாம். இதுகுறித்து மேலும் தகவல் வேண்டுவோர் திருவண்ணாமலையில் உள்ள விதைச்சான்று உதவி இயக்குனரை நேரில் அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**இயற்கை விவசாயத்தில் ஏக்கருக்கு 22 மூட்டை நெல் விளைச்சல்**

பள்ளிபாளையம், : ரசாயன உரங்களை பயன்படுத்திய வயல்களை விட, இயற்கை உரங்களை பயன்படுத்தி சாகுபடி செய்யப்பட்ட வயல்களில் மகசூல் குறைந்துள்ளது. இயற்கை சாகுபடியில் ஏக்கருக்கு 13 மூட்டைகள் வரை குறைவாகவே கிடைத்துள்ளதால், ஒரு கிலோ அரிசியை ரூ.70 விற்பனை செய்ய வேண்டிய நெருக்கடியில் இயற்கை விவசாயி தள்ளப்பட்டுள்ளார். விஷமில்லா நெல் தானியத்தை உற்பத்தி செய்யும் முயற்சியில், பள்ளிபாளையம் இயற்கை விவசாயி நந்தகோபாலன் ஈடுபட்டார். இதற்காக 1.70 ஏக்கரில் பொன்னி நெல் உற்பத்தியில் ஈடுபட்டார். அரசின் திருந்திய நெல் சாகுபடி முறையில் மேடை பாத்தி அமைத்து நாற்று விட்ட நந்தகோபாலன், ஆரம்பம் முதல் இறுதி வரை இரசாயன உரம் மற்றும் பூச்சி மருந்துகளை உபயோகப்படுத்துவதில்லை என்ற உறுதியோடு செயல்பட்டார். இயற்கையாக கிடைக்கும் தொழுஉரங்கள், தக்கை பூண்டு, சணப்பை, வேப்பம்புண்ணாக்கு ,கொட்டமுத்து புண்ணாக்கு, கை செக்கில் ஆட்டிய கடலை புண்ணாக்கு போன்றவற்றை பயன்படுத்தி பயிர் விளைச்சலில் ஈடுபட்டார். பூச்சிவிரட்டியாக வேப்பஎண்ணெய், நாட்டு மாடு கோமியம், ஆடுதோடா இலை போன்றவற்றை பயன்படுத்தினார். இது தவிர பயிர் ஊக்கத்திற்காக பஞ்சகவ்யம் பயன்படுத்தப்பட்டது. மூன்று மாத பயிர் பாதுகாப்பிற்கு பிறகு, கடந்த வாரம் விளைந்த நெல் அறு வடை செய்யப்பட் டது. இயற்கை யான பயிர் ஊக்கிகளை மட்டுமே பயன்படுத்தி விஷமில்லாத விவசாயம் மூலம் ஏக்கருக்கு 22 மூட்டை நெல்விளைந்துள்ளது. ரசாயன உரங்களையும், பூச்சி கொல்லிகளையும் பயன்படுத்திய வயல்களில் ஏக்கருக்கு 35 மூட்டைகள் வரை விளைந்துள்ள நிலையில், இயற்கை விவசாயத்தில் ஏக்கருக்கு சுமார் 13 மூட்டைகள் வரை குறைந்துள்ளது. இது குறித்து நந்தகோபாலனிடன் கேட்டபோது: ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்ட வயல்களை விட, இயற்கை விவசாயத்தில் கிடைத்த மகசூல் குறைவுதான். முதல் முறை என்பதால் சாகுபடி பயிர்பாதுகாப்பில் தெளிவான அணுகுமுறை

தெரியவில்லை. பூச்சி விரட்டி தயாரிக்க லிட்டர் 7 ரூபாய் வீதம் 250 லிட்டர் பசுமாட்டு கோமியம் வாங்கினேன். தழைச்சத்து கிடைப்பதற்காக தக்கை பூண்டு சணப்பை போன்றவற்றை பயிர் சாகுபடிக்கு முன்பே பயன்படுத்தி இருந்தால் வேப்பம்புண்ணாக்கு, கடலை புண்ணாக்கு செலவு குறைந்திருக்கும். இயற்கை விவசாயத்தில் எனக்கு நட்டம்தான் என்றாலும், விஷமில்லாத உணவை உற்பத்தி செய்த மன திருப்தி கிடைத்துள்ளது. அறுவடை செய்த நெல்லை அரிசியாக்க ஆலைக்கு கொடுத்துள்ளேன். விஷமில்லாத இந்த இயற்கை சாகுபடி அரிசியை கிலோ 65 முதல் 70 ரூபாய் வரை விற்றால்தான் நஷ்டத்திலிருந்து தப்ப முடியும். இது போன்ற இயற்கை விவசாயம் செய்பவர்களை அரசு சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க வேண்டும். இயற்கை விவசாயத்தில் நஷ்டமானாலும் தற்போது நல்ல அனுபவம் கிடைத்துள்ளது. கோமியத்திற்காக நாட்டு மாடு வாங்கியுள்ளேன். அடுத்து முறையும் நான் இயற்கை உரங்களை பயன்படுத்தித்தான் விவசாயம் செய்வேன். இவ்வாறு அவர் கூறினார். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு ரூ.702 கோடி பயிர் கடன் வழங்கல் ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ.702 கோடி மதிப்பீட்டில் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு சரகத்தில் 59 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், கோபி சரகத்தில் 104 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் என மொத்தம் 163 கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர் கடன்கள், நகையீட்டு பயிர் கடன்கள் உள்ளிட்டவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதில், பயிரிடுவதற்கு தனியாகவும், உரங்கள், பூச்சி மருந்துகள் பெற என தனித்தனியாக கடன் வழங்கப்படுகின்றது. கடன் பெறும் விவசாயிகள் உரிய காலத்திற்குள் கடனை திருப்பி செலுத்தினால் வட்டி தள்ளுபடி செய்யப்படுகின்றது. ஈரோடு மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் மட்டும் ரூ.702 கோடிக்கு பயிர்

கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 877 விவசாயிகள் பயிர் கடனை திருப்பி செலுத்தி வட்டி சலுகையை பெற்றுள்ளதாகவும், நடப்பு நிதியாண்டில் மட்டும் ரூ.234 கோடிக்கு 36 ஆயிரம் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், அரசிடமிருந்து வட்டியில்லா பயிர் கடன் மானியமாக ரூ.42 கோடி வந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**திருச்செந்துறையில் வாழைத்தார் ஏலம்**

திருச்சி, : திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் நடைபெறுகிறது. திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் ஸ்ரீரங்கம் தாலுகா திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் இன்று நடைபெறுகிறது. இந்த ஏலத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷனு மின்றி அவர்களுக்கு உடனுக்குடன் பணமும் பட்டுவாடா செய்யப்படுகிறது. இங்கு வாழைத்தார் கொண்டு வரும் விவசாயிகள் காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும். திருச்சி மாவட்டம் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு மண் பரிசோதனை பயிற்சி முகாம்**

பாபநாசம், : பாபநாசம் அருகே உள்ள அம்மாப்பேட்டை ஒன்றியம் இரும்புத்தலை கிராமத்தில் வேளாண்மைத்துறை, விவேகானந்தா ஊரக வளர்ச்சி மையம் சார்பில் இயற்கை உழவர் மன்ற விவசாயிகளுக்கு மண் பரிசோதனை விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சியை அம்மாப்பேட்டை வட்டார வேளாண்மைத்துறை உதவி அலுவலர் சதீஷ், விவேகானந்தா சமூக கல்வி சங்க வேளாண் ஊரக வளர்ச்சி மைய அலுவலர் வேல் முருகன் நடத்தினார். முகாமில் பரிசோதனைக்கு மாதிரி மண்

எடுக்கும்போது வயல் பரப்பிலி ருந்து 3 அடி உட்புறத்திலும், எரு, உரம் போடாத நிலப்பரப்பிலும் ஒன்றரை அடி ஆழத்தில் மண்ணை தோண்டி எடுத்து அதை ஒரே இடத்தில் குவித்து ஈர பதமில்லாத அளவுக்கு உலர வைக்க வேண்டும். பின்னர் அதை 4 பங்காக பிரித்து அதிலிருந்து அரை கிலோ மண்ணை எடுத்து பிளாஸ்டிக் பாக்கெட்டில் அடைத்து அத்துடன் ஒரு துண்டு சீட்டில் விவசாயியின் பெயர், முகவரி, நிலத்தின் சர்வே எண், மண் எடுத்த தேதி, தொலைப்பேசி எண்ணை குறிப்பிட்டு அருகில் உள்ள வேளாண்மை அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். அல்லது ஆடுதுறையில் உள்ள மண் பரிசோதனை ஆய்வுக்கூடத்தில் சமர்ப்பிக்கலாம். இதனால் மண்ணுக்கேற்ற பயிர்களை சாகுபடி செய்யலாம். அளவான உரங்களை பயன்படுத்தலாம். குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம் என்று விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சியில் இயற்கை உழவர் மன்ற பொறுப்பாளர்கள் கோபிநாத், சங்கர், முன்னோடி விவசாயிகள் முருகேசன், பாலமுருகன், பாபு உட்பட 30 விவசாயிகள்பங்கேற்றனர்.

**<u>விவசாயிகள் கண்டுபிடிக்கும் புதிய பயிர் ரகங்களை பதிவு செய்து பயன் பெறலாம் கலெக்டர்</u>**

திருவாரூர்,: திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் தாவர இரகங்கள் மற்றும் உழவர்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் தஞ்சை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சாமிஅய்யன், வேளாண் இணை இயக்குனர் மயில்வாகனன், கூட்டுறவு இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், நபார்டு மாவட்ட வளர்ச்சி மேலாளர் ரவிசங்கர், வேளாண் துணை இயக்குனர் நடேசன், நீடாமங்கலம் அறிவியல் நிலைய தலைவர் சோழன் மற்றும் நெல்.ஜெயராமன், தஞ்சை சித்தர், லால்குடி செந்தில்குமார், மற்றும் விவசாய பிரதிநிதிகள், வேளாண் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். கருத்தரங்கை துவக்கி வைத்து கலெக்டர் மதிவாணன் பேசியதாவது, தாவர ரகங்கள் மற்றும் உழவர்களின் உரிமைகள்

பாதுகாப்புச் சட்டம், தாவர ரகங்களை பாதுகாப்பதற்கும் உழவர்கள் மற்றும் புதிய ரகங்கள் அபிவிருத்தியில் ஈடுபடும் வல்லுநர்கள் இல்லாது விஞ்ஞானிகள், இனப் பெருக்காளர்கள் உரிமைகளை பாதுகாக்க மத்திய அரசால் 2001ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் முக்கிய நோக்கங்களாக தாவர மரபணு ஆதாரங்களை பாதுகாத்து பாரம்பரிய ரகங்களை பயன்பாட்டிற்கு கிடைக்கச் செய்து, அதன் மூலம் புதிய ரகங் களை உருவாக்க வழிவகுத்த உழவர்களை அங்கீகரித்து, அவர்களின் உரிமைகளை பாதுகாப்பது மேலும் உழவர்களினால் பாதுகாக்கப்பட்ட பாரம்பரிய ரகங் களைக் கொண்டு அதை தாவர மரபியல் வளம் சேமிப்பு கிடங்கில் சேமித்து, புதிய ரகங்களை உருவாக்க துணைபுரிவதை அங்கீகரித்தல், மற்றும் விஞ்ஞானிகள் உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் ரகங்களை மேம்படுத்துவது, புதிய ரகங் களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சியில் பொது மற் றும் தனியார் துறைகளின் முதலீட்டை ஊக்குவிப்பது, பாதுகாப்பான உயர்ரக விதை மேம்பாட்டின் மூலம் உயர்ந்த ரக தாவரங்கள் மற்றும் ரகங்கள் உழவர்களுக்கு கிடைக்கச் செய்திடுவது மற்றும் நாட்டின் விதை உற்பத்தி துறையின் வளர்ச்சிக்கு உதவுவது ஆகும். உழவர்கள் தங்கள் அனுபவத்தால் புதிய ரகத்தை கண்டறிந்தால் அவற்றை விஞ்ஞானிகள் போல் பதிவு செய்து உரிமை பெறலாம். இந்த சட்டத்தின்கீழ் பதிவு செய்த ரகங்கள் சாகுபடி செய்யும்பொழுது எதிர்பார்த்த பலனை தரவில்லை என்றால் உழவர்கள் இழப் பீடு பெற இச்சட்டத்தின் 39(2)ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆணையத் தால் எடுக்கப்படும் முடிவுகளுக்கு உழவர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால் ஆணைய தீர்ப் பாயம் அல்லது ஐகோர்ட்களில் வழக்கு தொடர எந்த தொகையும் கட்ட வேண்டியதில்லை. மேலும் உழவர்கள் உரிமை சட்டம் பாகம் 26ன் கீழ் தனிநபரோ அல்லது குழுக்களோ லாப பங்கீடுகளை பெற தகுதியுடையவர்கள் ஆவர். எனவே உழவர்கள் தாங்கள் கண்டுபிடிக்கும் புதிய ரகங்களை உழவர் பாதுகாப்பு உரிமைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து பலனடையுமாறு விவசாயிகளை கேட்டுகொள்கிறேன். இவ்வாறு கலெக்டர்

பேசினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 27 ஆயிரம் டன் நெல் கொள்முதல் உணவுப்பொருள் வழங்கல்துறை ஆணையர் தகவல்



தஞ்சை மாவட்டத்தில் 27 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று உணவுப்பொருள் வழங்கல்துறை ஆணையர் கோபாலகிருஷ்ணா கூறினார்.

ஆணையர்ஆய்வு

தஞ்சை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலைய செயல்பாடுகளை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் கோபாலகிருஷ்ணா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தஞ்சையை அடுத்த நீலகிரி தெற்கு தோட்டம் வட்டார அரிசி கிடங்கை பார்வையிட்ட ஆணையர் அவர்கள் பொது வினியோகத் திட்டத்திற்கு அரிசி ஏற்றி அனுப்பும் பணியை விரைவுபடுத்தினார். மேலும் எக்காரணத்தை கொண்டும் பொது வினியோகத் திட்டத்திற்கு அரிசி அனுப்பப்படும் பணியினை கால தாமதப்படுத்தக்கூடாது என நுகர்பொருள் வாணிப கழக அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர் வாண்டையார்இருப்பு நேரடி நெல்கொள்முதல் மற்றும் தானிய கிடங்கினை பார்வையிட்ட ஆணையர் கோபாலகிருஷ்ணா, வங்கிகள் மூலம் பணப்பட்டு வாடா விவசாயிகளுக்கு சுலபமாக இருக்கிறதா என கேட்டறிந்தார். அப்போது விவசாயிகள், வங்கிகள் மூலம் பணம் பெற்றுக்கொண்டாலும், அறுவடை செய்த நெல்லை போட்டவுடன் பணமாக கொடுத்தால் தான் மிகவும் வசதியாக இருக்குமென தெரிவித்தனர். விவசாயிகளுக்கு எந்த முறை சுலபமாக இருக்கிறதோ அந்த முறையில் பெற்றுக் கொள்ளலாம் என ஆணையர்

தெரிவித்தார்.

27ஆயிரம்டன்

மேலும் சாக்குகள் போதிய அளவு உள்ளதா? எனவும் கொள்முதல் செய்யும் நெல்லிற்கு பணம் கையிருப்பு சரியாக உள்ளதா? எனவும் விவசாயிகள் கொண்டு வரும் நெல்லின் ஈரப்பதம் 17 சதவிகிதம் இருக்கிறதா? எனவும் அதற்குண்டான கருவி சரியாக இருக்கிறதா எனவும் கோபாலகிருஷ்ணன் பார்வையிட்டார். பின்னர் ஆணையர் கோபாலகிருஷ்ணன் கூறுகையில், “தஞ்சாவூர் மாவட்டத்தில் 339 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இதுவரை 26 ஆயிரத்து 843 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல்லிற்கு இதுவரை ரூ.39 கோடியே 45 லட்சம் பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது”என்றார். ஆய்வின் போது கலெக்டர் சுப்பையன், நுகர்பொருள் வாணிப கழக துணை மேலாளர் (தரக்கட்டுப்பாடு) கலியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.